| | | |
|---|---|---|
| அ.வ.எண். | : | **382/2014** |
| தேதி | : | **03.06.2026.** |
| பெயர் | : | **ஜமீர் அகமது த/பெ. அப்துல் கரீம்** |

**வா.த.சா.1 (PW1) அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**
**(**சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது**. )**

**வா.த.சா.1. (PW1) - குறுக்கு விசாரணை :**

**1)** பிரதிவாதிகள் தவணையை ஒழுங்காக செலுத்தார காரணத்தினால் நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வாதசா. 1 எங்கள் Lay out ல் வீட்டு மனை வாங்குவதற்கான விண்ணப்பம் என்றால் சரிதான். அந்த விண்ணப்பம் ஆனது ALKHOBER என்ற இடத்தில் இருந்து 21.01.2002 ம் தேதி விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன விண்ணப்பம் தாக்கல் செய்த தேதியில் நான் பணியில் இல்லை. நான் விண்ணப்பம் செய்த நாளில் பணியில் இல்லாத காரணத்தினால் இந்த பரிவர்த்தனை தொடர்பான என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. ஆனால் எனது அலுவலகத்தில் அதைப்பற்றி கூறியுள்ளார்கள்.

2) இந்த வழக்கின் தாவா சொத்து சம்பந்தமாக வாதி பிரதிவாதிக்கும் இடையே ஏதேனும் ஒப்பந்தம் மற்றும் இதர ஆவணங்கள் கையெழுத்திடப்பட்டதா என்றால் இல்லை. வாதசாஆ 1 ன் அடிப்படையில் பிரதிவாதியானவர் ரூபாய் 10,000 முன் தொகையாக செலுத்தியுள்ளார். வாதசாஆ 2 தாவா சொத்து கிரயப்பத்திரமாகும். அதில் ரூபாய் 14,400 கிரயத்தொகையாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வாதசாஆ 3 வாதி பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த வாதசாஆ 2 எழுதி பதிவு செய்யப்பட்ட ரத்து பத்திரம் ஆகும்.

3) வாதசாஆ 2 யை ரத்து செய்யப்பட்ட பின்னர் பிரதிவாதிக்கு திருப்பி தரவேண்டிய தொகையை செலுத்தியதற்கான ஆவணங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 6ல் கிரயப்பத்திரம் ரத்து செய்வது தொடர்பாக உள்ள அரசாங்க உத்தரவு பற்றி குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன பிரமாணவாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்ட தேதி 23.04.2025 ஆகும். மேற்படி பிரமாணவாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்ட தேதியில் G.O. No. 150 dated 22.09.2000 & 139 dated 25.07.2007 ஆகிய இரண்டு உத்தரவுகளும் செயல்பாட்டில் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4) வாதசாஆ 2 யை ரத்து செய்வதற்கு முன்னதாக பிரதியாதியிடம் பணம் கேட்டு ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை ஆனால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக ஒரு கிரய ஆவணத்தை தன்னிச்சையாக ரத்து செய்ய முடியாது என்றும், அது ரத்து செய்யவேண்டும் என்றால் நீதிமன்றத்தை அனுகி உரிய உத்தரவு பெற்று தான் ரத்து செய்யமுடியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5) வாதசாஆ 4 பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு. அதில் வாதசாஆ 2 தன்னிச்சையாக ரத்து செய்ய முடியாது என்று குறிப்பிட்டு அந்த அறிவிப்பை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதற்கு நாங்கள் பதில் அறிவிப்பு கொடுத்துள்ளோம். மேற்சொன்ன பதில்அறிவிப்பை நாங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதசாஆ 5 , வாதசாஆ 4 கொடுக்கப்பட்ட பிறகு பிரதிவாதி மீது நாங்கள் கொடுத்த புகார் என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க சாட்சி குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யவேண்டி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )

**சாட்சி கையொப்பம் Sd/.** ஜமீர் அகமது

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. P. Jagadeeswaran.
District Munsif,
Sriperumbudur.